டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 13.11.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 122 | Madurai | Online Edition

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்

சின்ன வெங்காயத்திற்கான இடைக்கால விலை முன்னறிவிப்பு



கோயம்புத்தூர், நவ.12

இந்தியா உலகளவில் வெங்காய உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. இந்திய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச் சகத்தின் இரண்டாவது முன் மதிப்பீடுகளின் படி (2025-26), இந்தியாவில் 19.68 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் வெங்காயம் பயிரிடப்பட்டு, மொத்தம் 307.67 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் இந்தியாவின் முக்கிய வெங்காய உற்பத்தி மாநிலங்களாக விளங்குகின்றன. அதேவேளையில், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்கள் சின்ன வெங்காய உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன.

தமிழ்நாட்டில் 0.45 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 4.57 லட்சம் டன்கள் வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது. திண்டுக்கல், திருப்பூர், பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், தேனி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்கள் தமிழ்நாட்டில் வெங்காய உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் சமையலில் சின்ன வெங்காயத்தின் பயன்பாடு அதிகம் என்பதால், பண்டிகைக் காலங்களில் இதற்கான தேவை கணிசமாக அதிகரிக்கிறது. தமிழ்நாட்டின் உள்மாநிலத் தேவையை உள்ளூர் உற்பத்தியே பூர்த்தி செய்கிறது.

இருப்பினும், கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற அண்டை மாநிலங்களிலிருந்து வரும் வரத்து கூடுதல் தேவையை ஈடுசெய்கிறது. இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சின்ன வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதன் மூலம், தமிழ்நாடு ஒரு முக்கிய ஏற்றுமதி மையமாகத் திகழ்கிறது.

உடுமலைப்பேட்டை, தாராபுரம், பெரம்பலூர் மற்றும் பல்லடம் ஆகிய இடங்களிலிருந்து திருச்சி மற்றும் திண்டுக்கல்லில் உள்ள முக்கிய சந்தைகளுக்கு வரும் சின்ன வெங்காயத்தின் வரத்து குறைந்துள்ளது. சாதகமற்ற வானிலை நிலவுவதே இந்த வரத்துக் குறைவிற்குக் காரணமாகி, முக்கிய சந்தைகளில் புதிய விளைபொருட்கள் கிடைப்பதைப் பாதித்துள்ளது. தற்போது, இந்தச் சந்தைகளுக்கு மாதம்பட்டி, ஆலந்துறை, தொண்டா முத்தூர், தேனி மற்றும் சின்னமனூர் ஆகிய இடங்களிலிருந்து சின்ன வெங்காயம் வந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் பொருளியல் துறையின் கீழ் இயங்கும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவு பிரிவு, கடந்த 15 ஆண்டுகளில் திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காய விலைத்தரவுகளை ஆய்வு செய்து, சந்தை ஆய்வையும் மேற்கொண்டது. இந்தக் காலத் தொடர் பகுப்பாய்வின்படி, அறுவடை காலத்தில் தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.60 முதல் 65 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் இந்தத் தகவலைக் கருத்தில் கொண்டு தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்வது குறித்து முடிவெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு, வேளாண் பொருளியல் துறை, வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி எண் : 0422-2431405, மின்னஞ்சல் : tndemic@gmail.com தொடர்பு கொள்ளலாம்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தொழில் முனைவோருக்கான திறன் மேம்பாட்டு இரண்டு நாள் பயிற்சி



மதுரை, நவ.12

அங்கக மற்றும் இயற்கை விவசாயத்திற்கான மண்டல மையம் பெங்களூரு, வேளாண்மை அறிவியல் நிலையம் மதுரை, மாநில வேளாண்மை துறை மற்றும் மாநிலத் தோட்டக்கலைத்துறை ஆகியவற்றுடன் இணைந்து மதுரை வேளாண் அறிவியல் நிலையத்தில் 12.11.26 முதல் 13.11.26 வரை உயிரியல் உள்ளீடுகள் ஆராய்ச்சி மையம், தொழில் முனைவோருக்கான திறன் மேம்பாட்டு இரண்டு நாள் பயிற்சி நடத்துகிறது.

இந்த நிகழ்ச்சியை வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) R.ராணி மற்றும் வேளாண் அறிவியல் நிலையம், மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் டாக்டர் லு.சுரேஷ் ஆகியோர் தொடங்கி வைத்தனர். பெங்களூரு, அங்கக மற்றும் இயற்கை விவசாயத்திற்கான மண்டல மையத்தின், உதவி இயக்குனர், டாக்டர் பிரியங்கா பிரதான், தற்போதைய சூழலில் இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்து பங்கேற்பாளர்களுக்கு விளக்கி இயற்கை விவசாயத்திற்கான தேசிய இயக்கம் மற்றும் உயிரியல் உள்ளீடுகள் ஆராய்ச்சி மையம், திட்டம் குறித்தும் விளக்கினார். வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) R.ராணி மதுரையில் உயிரியல் உள்ளீடுகள் ஆராய்ச்சி மையம், திட்டத்தின் நிலை குறித்து விளக்கினார். விதை மற்றும் இயற்கைச் சான்றிதழ் உதவி இயக்குனர் மகாலட்சுமி, இயற்கை விவசாயத்தில் நாட்டு விதைகளின் முக்கியத்துவம், விதை நேர்த்தி குறித்து விளக்கினார். இயற்கை விவசாயத்திற்கான தேசிய இயக்கம் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட 25 தொழில் முனைவோர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இந்த பயிற்சித் திட்டம் உயிரியல் உள்ளீடுகள் ஆராய்ச்சி மையம் தொழில்முனைவோர் / விவசாயிகள் / FPOக்களின் திறன் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

அங்கக சான்றிதழ் நடைமுறைகள் குறித்த உள்மாவட்ட அளவிலான பயிற்சி

மதுரை, நவ.12

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், விராதனூர் கிராமத்தில் அங்கக சான்றிதழ் நடைமுறைகள் குறித்த உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம், தலைமையில் நடைபெற்றது.



இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையம் கால் நடை மருத்துவர் முனைவர் சரவணன், கலந்து கொண்டு இயற்கை விவசாயம் வேளாண் வணிகம் பற்றி சிறப்புரை ஆற்றினார். விதை சான்று வேளாண் அலுவலர் நித்யா, அங்ககச் சான்று நடைமுறைகள் மற்றும் சான்று விதைகளின் முக்கியத்துவம் குறித்தும் உயிர் உரங் களின் பயன்பாடு குறித்து எடுத்துக் கூறினார். வேளாண்மை அலுவலர் அருள் நவமணி விஜய பாரதி, வேளாண்மை துறை திட்டங்கள் பயிர்களுக்கு மானிய திட்டங்கள் மற்றும் உரங்கள் பரிந்துரை சிறுதானிய பயிர் பாதுகாப்பு முறைகள் விதைப்பு முறைகள் குறித்து பயிற்சி எடுத்தார். துணை வேளாண்மை அலுவலர் அழகேசன், விளைநிலம் காப்போம் பற்றி எடுத்துக் கூறினார். கிராம தங்கள் திட்டத்தில் பயிற்சி பெறும் அருப்புக் கோட்டை என்எம்வி பல்கலைக்கழகம் வேளாண்மை கல்லூரி நான்காம் ஆண்டு மாணவி கயல்விழி, கம்போஸ்ட் மண்புழு உரம் பயன்பாடு குறித்து பேசினார்கள். வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா வரவேற்புரை வழங்கி இயற்கை சார்ந்த வேளாண் நடைமுறைகள் பற்றி பயிற்சி அளித்து நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில் நுட்ப மேலாளர் அழகர் மற்றும் மகாலட்சுமி செய்திருந்தனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

விவசாயிகளுக்கு பஞ்சகவ்யம் தயாரித்தல் மற்றும் பயன்படுத்துதல் குறித்த செயல்விளக்கம்!



நாகப்பட்டினம், நவ.12

நாகப்பட்டினம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (Rural Agricultural Work Experience – RAWE) கீழ் குடவாசல் வட்டாரத்தில் தங்கி, கிராமப்புற விவசாயிகளுடன் இணைந்து பல்வேறு வேளாண் சார்ந்த செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, இன்று நெடுஞ்சேரி கிராமத்தில் விவசாயி களுக்குப் பயனளிக்கும் வகையில் பஞ்சகவ்யம் தயாரித்தல் மற்றும் பயன்படுத்துதல் குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் பஞ்சகவ்யம் தயாரிக்கத் தேவையான பொருட்கள், அவற்றின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத் தனர். பஞ்சகவ்யம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பசுஞ்சாணம், பசுவின் கோமியம், பால், தயிர், நெய், வெல்லம், வாழைப்பழம் மற்றும் இளநீர் போன்ற பொருட்களின் பங்கு மற்றும் அவற்றின் பயன்கள் குறித்தும் விளக்கினர்.

மேலும், பஞ்சகவ்யத்தை முறையாகத் தயாரிக்கும் படிநிலைகள், நொதித்தல் செயல்முறை, தயாரிப்பதற்கான கால அளவு மற்றும் வயலில் பயன்படுத்துவதற்கு ஏற்ற முறைகள் குறித்தும் மாணவர்கள் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து, பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க பஞ்சகவ்யத்தை இலைவழித் தெளிப்பாகவும், மண் வழியாகவும் பயன்படுத்தும் முறைகள் குறித்து எடுத்துரைத்தனர். குறிப்பாக, ஒரு ஏக்கர் நிலத்திற்கு எவ்வளவு அளவு பஞ்சகவ்யம் தேவைப்படுகிறது, எவ்வாறு தண்ணீரில் கலந்து பயன்படுத்த வேண்டும்.

இப்கோ நானோ விழிப்புணர்வு முகாம்



மயிலாடுதுறை, நவ.12

மயிலாடுதுறை மாவட்டத்தில் தனியார் உர விற்பனையாளர்களுக்கான உர விற்பனை கட்டமைப்பு (Framework for Fertilizer Sales – FFS) தொடர்பான பயிற்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், FFS செயலியின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், FFS கட்டமைப்பின் கீழ் விற்பனை முனையக்கருவி (POS Machine) மூலம் உர விற்பனை மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

இதனுடன், இப்கோ கள அதிகாரி இப்கோவின் நானோ யூரியா, நானோ டிஏபி மற்றும் சாகரிகா உள்ளிட்ட திரவ உரங்களின் முக்கியத்துவம், பயன்பாட்டு முறைகள் மற்றும் பயிர் வளர்ச்சிக்கான அவற்றின் பயன்கள் குறித்து உர விற்பனையாளர்களுக்கு விழிப் புணர்வு ஏற்படுத்தினார். மேலும், நவீன உரத் தொழில் நுட்பங்கள் மற்றும் இப்கோவின் புதிய வேளாண் தயாரிப்புகளை விவசாயி களிடம் கொண்டு சேர்ப்பதில் உர விற்பனையாளர்களின் பங்கு குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சி நிகழ்ச்சி உர விற்பனை நடைமுறைகளை முறையாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள் வதற்கும், இப்கோ நானோ உரங்கள் குறித்த விழிப்புணர்வை விரிவுபடுத்துவதற்கும் பயனுள்ளதாக அமைந்தது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தலிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P.Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

ஊரக வேளாண் பணி அனுபவத்திட்ட தொடக்க விழா

ஈரோடு, நவ.12

ஈரோடு மாவட்டம், ஜே.கே.கே. முனிராஜா வேளாண்மை அறிவியல் கல்லூரியின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ், டி.என்.பாளையம் வட்டாரத்தில் தொகுதி தொடக்க விழா 4.11.26 அன்று நடைபெற்றது. இதனை முன்னிட்டு, காலை 10.00 மணியளவில் காசிபாளையம் கிராமத்தில் உள்ள ஈஸ்வரன் கோவில் மண்டபத்தில் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தின் சார்பில் ATMA பயிற்சி நடைபெற்றது. இதில் கிருஷி விக்யான் கேந்திரா (KVK) விஞ்ஞானி மற்றும் கால்நடை மருத்துவர் டாக்டர் கோவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கினர். தொடர்ந்து, நண்பகல் 12.00 மணியளவில் தொகுதி தொடக்க விழா நடைபெற்றது.



இவ்விழாவில் ஜே.கே.கே. முனிராஜா வேளாண்மை அறிவியல் கல்லூரியின் முதல்வர் டாக்டர் கல்யாணசுந்தரம் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். டாக்டர் மோனிகா, உதவிப் பேராசிரியர் (வேளாண்மை விரிவாக்கவியல்), உழவியல் துறை உதவிப் பேராசிரியர் டாக்டர் எஸ். கௌதம் மற்றும் தாவர நோயியல் துறை உதவிப் பேராசிரியர் டாக்டர் ஜே.ஷாஜித் பாஷா ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்கு சிறப்புரையாற்றினர். மேலும், வேளாண்மை உதவி இயக்குநர் அமுதா, வேளாண்மை அலுவலர் ஆனந்தி, தோட்டக்கலை அலுவலர் சவிதா மற்றும் துணை வேளாண் அலுவலர் என்.பழனிசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். விழாவில் 55-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் டாக்டர் கல்யாண சுந்தரம் தனது உரையில், வேளாண்மையின் சிறப்பம்சங்கள், அதன் முக்கியத்துவம் மற்றும் நவீன வேளாண் தொழில் நுட்பங் களைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

டாக்டர் எஸ்.கௌதம், ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள், ஆடு மற்றும் மாடு வளர்ப்பு, பயிர் சாகுபடி, பயிர் மேம்பாடு மற்றும் வயல் மேலாண்மை குறித்து விளக்கினார். டாக்டர் ஜே.ஷாஜித் பாஷா, பயிர் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை, குறிப்பாக உயிரியல் முறையிலான நோய் மேலாண்மை மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். தொடர்ந்து, டி.என்.பாளையம் வட்டாரத்தில் பணியாற்றும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட மாணவர்கள் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் அதன் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர். மேலும், இயற்கை முறையில் பூச்சி விரட்டிகள் மற்றும் வாழைக் கரைசல் தயாரிக்கும் முறைகள் குறித்து செயல்விளக்கப் பயிற்சியும் அளித்தனர். இதன் மூலம் இயற்கை இடுபொருட்களைத் தயாரிக்கும் முறைகள் மற்றும் அவற்றைப் பயிர்களில் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்து விவசாயிகள் நேரடிப் பயிற்சி பெற்றனர். இறுதியாக, விவசாயிகள் தங்களது சந்தேகங்களைக் கேட்டறிந்து வேளாண் வல்லுநர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களுடன் கலந்துரையாடினர். விவசாயிகளின் ஆர்வமிக்க பங்கேற்புடன் விழா சிறப்பாக நிறைவடைந்தது.

அரசு தென்னைப் பண்ணையை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்

மயிலாடுதுறை, நவ.12

தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேளாண் மாணவவிகள், மயிலாடுதுறை மாவட்டம், மல்லியம் கிராமத்தில் உள்ள அரசு தென்னைப் பண்ணைக்குச் சென்றனர். அங்கு உதவி தோட்டக்கலை அலுவலர் இளவரசனை சந்தித்தனர். தென்னை சாகுபடி முறைகள் குறித்து மாணவர்கள் கேட்டறிந்தனர். மேலும், தென்னை விதைத் தேங்காய்களை விதைக்கும் பணியில் ஈடுபட்டு விவசாயிகளுக்கு உதவினர். தென்னையில் ஏற்படும் பூச்சித் தாக்குதல்கள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் தெரிந்து கொண்டனர். இந்தக் களப்பயணம் மாணவர்களுக்கு நேரடி செய்முறை அனுபவத்தையும் வேளாண் அறிவையும் மேம்படுத்த உதவியது.



விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.12

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக12.11.26 அன்று ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டாரத்தில் உள்ள கார்மாங்குடி, கண்ணாடி மற்றும் காடாம்புலியூர் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் சு ஜெய்வேலு, சத்தியநாராயணன் மற்றும் கமலக்கண்ணன் ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமை களை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டசத்துக்கள் மேம்ப்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர்.இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

கேவிகேயில் வேளாண்மை அலுவலர்களுக்கான மாதாந்திர பணிமனை கூட்டம் நடந்தது

மதுரை, நவ.12

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில், வேளாண் அலுவலர்களுக்கான மாதாந்திர பணிமனை கூட்டம் வேளாண் இணை இயக்குனர் (பொ) ராணி தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் முனைவர் கி.சுரேஷ், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர், பருத்தி மற்றும் மக்காச் சோளத்தில் பூச்சி மேலாண்மை என்ற தலைப்பில் வேளாண் அலுவலர்களுக்கு விளக்கம் அளித்தார். இப்பணிமனையில் மதுரை மாவட்டத்தை சேர்ந்த வேளாண்மை துணை இயக்குனர்கள், உதவி இயக்குனர்கள், வேளாண்மை அலுவலர்கள் என 42 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேளாண்மையில் பாரம்பரிய தொழில்நுட்பங்களின் பங்கு

தற்போதைய கால கட்டத்தில வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்கள் வந்தாலும், பாரம்பரிய தொழில்நுட்பங் களுக்கு என்றுமே தனிப்பட்ட மவுசு உள்ளது. இது தலைமுறை தலைமுறையாக இயற்கையோடு இணைந்து சுற்றுப்புற சூழலியலுகேற்றவாறு பின்பற்றபடும் குறைந்த செலவிலான பயனுள்ள தொழில்நுட்ப முறையாகும். அதை பற்றி விரிவாக பார்ப்போம்.

1) சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த?

ஒரு லிட்டர் வேப்ப எண்ணெயில் 3 கிலோ குறுமணல் மற்றும் 3 கிலோ சாணத்தை 3 நாட்கள் ஈரம் காயாமல், ஈரச்சாக்கு கொண்டு போர்த்தி குவியலாக வைத்து, 4ஆம் நாளில் அதை 150 லிட்டர் நீரில் கலந்து தெளித்தால் சாறு உறிஞ்சும் பூச்சி களான இலைப்பேன், தத்துப்பூச்சி, அசுவினிகளை கட்டுப் படுத்தலாம்.

2) கதிர் நாவாய்பூச்சியை கட்டுப்படுத்த?

10 கிலோ காய்ந்து போன சாணத்தை தூளாக்கி, அத்துடன் செங்கல் சூளை சாம்பலை சேர்த்து அதிகாலை வேளையில் தூவினால் நெல் பயிரில் கதிர்நாவாய் பூச்சி தாக்குதலை கட்டுபடுத்தலாம்.

3) தாய் அந்து பூச்சிகளை கவர

ஒரு மண் கலத்தில் எருக்கு இலை மற்றும் வேப்பம் புண்ணாக்கு கலந்து நீர்ஊற்றி நிலத்தில் தரையோடு தரையாக மண் கலத்தை புதைத்து வைத்தால் தாய் அந்து பூச்சிகள் அந்த வாடையில் கவரப்பட்டு கலத்தில் வீழும்.

4) அனைத்து வகை பூச்சிகளை கவர

ஊமத்தம் காயோடு, எருக்கு இலை, நொச்சி இலை இடித்து 15நாட்கள் நீரில் ஊறவைத்து வடிகட்டி தெளித்தால் அனைத்து விதமான பூச்சிகளும் கட்டுப்படுத்தப்படும்.

5) கரையான் தொல்லை குறைய?

நிலத்தை சுற்றி வரப்பு ஓரங்களில் அடர்த்தியாக பிரண்டையை நட்டால் கரையான் தொல்லை வெகுவாக குறையும்.

6) மண் அரிமானத்தை தடுக்க?

நிலத்தில் மழைக்காலங்களில் மண் அரிப்பு எற்பட்டு, பள்ளம் போன்ற ஓடை காணப்படும். இதை தடுக்க சரிவின் குறுக்காக வெட்டி வேர் புல்லை அடர்த்தியாக நட்டால் மண் அரிமானம் தடுக்கலாம்.

7) கோரை புல்லை கட்டுப்படுத்த?

பயிர் சுழற்சி மேற்கொண்டு, கொள்ளு பயறு (HORSES GRAM) விதைத்தால் கோரை கட்டுக்குள் இருக்கும்.

8) தானிய சேமிப்பு

50 கிலோ தானியத்திற்கு 1/2 கிலோ வசம்புத்தூளுடன் வேப்ப இலை, புங்க இலை கலந்து வைத்தால் ஒரு வருடம் வரை தானியங்களில் பூச்சி தாக்குதல் இருக்காது.

9) 10% உப்புக் கரைசலில் சாக்குபையை நனைத்து, பின் காயவைத்து அதில் பயறுவகைகள், தானியங்களை சேமிக்கலாம்.

10) தக்காளியில் நூற்புழுவை கட்டுப்படுத்த செண்டு மல்லியை வரப்பு ஓரங்களில் நடலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



பாரம்பரிய மற்றும் இயந்திர நெல் நாற்று நடவு முறைகளில் களப்பணி விவசாயிகளுடன் இணைந்து செயல்பட்ட வேளாண் மாணவிகள்!



திருச்சி, நவ.12

அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் வேளாண் மாணவிகளான ரித்திகா, சஹானா ஷாஜிதா, சாலினி, சந்தியா, சஹானா, ஷாலினி, ஸ்ரீதுர்கா, ஸ்ரீபிரியா, சுபிதா மற்றும் சிந்துஜா ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், கிராமப்புற விவசாயிகளுடன் இணைந்து பல்வேறு வேளாண் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, நவம்பர் 3ஆம் தேதி தொரவளூர் கிராமத்திற்குச் சென்ற மாணவிகள், CR 1009 (பொன்மணி) நெல் ரகத்தில் பாரம்பரிய மற்றும் இயந்திர முறைகளில் நாற்று நடவுப் பணியில் ஈடுபட்டனர். அங்குள்ள வயல்வெளியில் விவசாயிகளுடன் இணைந்து பாரம்பரிய முறையில் நாற்று களை உரிய இடைவெளியில் வரிசையாக நடவு செய்தனர். தொடர்ந்து, நான்கு வரிசை நெல் நடவு இயந்திரத்தின் (Four-row Rice Transplanter) உதவியுடன் இயந்திர முறையிலான நாற்று நடவையும் மேற்கொண்டனர். இதன் மூலம் நெல் சாகுபடியில் பாரம்பரிய மற்றும் நவீன இயந்திர நடவு முறைகளை வயல்வெளியில் செயல்படுத்தினர்.

மேலும், நடவு முறைகளின் செயல்பாடுகள் மற்றும் விவசாயி களின் கள அனுபவங்கள் குறித்தும் அறிந்து கொண்டனர். இந்நிகழ்வு மாணவிகளுக்கு விவசாயிகளுடன் நேரடியாக இணைந்து செயல்படவும், நெல் சாகுபடியில் பயன்படுத்தப்படும் பல்வேறு நடவு முறைகள் குறித்த நடைமுறை அறிவைப் பெறவும் பயனுள்ளதாக அமைந்தது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற விதைப் பரிசோதனை செய்வீர்!

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை அதிக அளவில் சாகுபடி செய்யப்படும். பொதுவாக கார்த்திகை மாதத்தில் விதைப்பு செய்வதால் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இந்த பட்டத்தில் சாகுபடி செய்யும் போது போதிய மழை, சரியான வெப்பநிலை சாதகமாக இருப்பதால், அதிக மகசூல் பெறப்படுகிறது. நிலக்கடலை உற்பத்தியில் அதிக மகசூலை பெற தரமான விதைகளைப் பயன்படுத்துவது முக்கிய மான ஒன்றாகும். நிலக்கடலையைப் பொருத்தவரை பயன்படுத்தப் படும் விதை களுக்கு குறைந்தபட்சம் 70 சதவிகிதம் முளைப்புத் திறனும், 96 சதவீதம் புறத்தூய்மையும் கட்டாயம் இருக்க வேண்டும். மேலும் விதையின் அதிகப்பட்ச ஈரப்பதம் 9 சதவீதம் இருக்க வேண்டும். நிலக்கடலை சாகுபடியில் அதிக இடுபொருள் செலவாக இருப்பது விதையே ஆகும். எனவே நல்ல தரமான சான்று பெற்ற விதையை தேர்வு செய்து விதைப்பு மேற்கொண்டு, பயிர் எண்ணிக்கையைப் சரியாக பராமரித்தால் அதிக மகசூல் பெறலாம். எந்த ஒரு பயிருக்கும் பயிர் எண்ணிக்கை என்பது மகசூலைக் கணிக்கும் முக்கிய அம்சமாகும். மேலும் தரமான விதைகளைப் பயன்படுத்தும் போது ஏக்கருக்கு சராசரி மகசூலைவிட 30 சதவீதம் கூடுதல் மகசூல் பெறலாம். எனவே மகசூல் அதிகப்படுத்துவதற்கு காரணியாக விளங்குவதே விதையின் தரமே ஆகும்.

மேலும் நிலக்கடலை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் விதை நிலக்கடலையைக் கட்டாயம் விதை பரிசோதனை செய்த பிறகே விதைப்பு மேற்கொள்ள வேண்டும். எனவே விவசாயிகள் தங்கள் கையிருப்பில் உள்ள விதை நிலக்கடலையில் 500 கிராம் அளவுக்கு விதை மாதிரி எடுத்து ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்) விதை பரிசோதனைக் கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், ஒருங்கிணைந்த விதை சான்றளிப்பு மற்றும் உயிர்ம சான்றளிப்பு வளாகம், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், நாகப்பட்டினம் – 611 003, என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதனை நாகப்பட்டினம் மாவட்டத் திற்கான தஞ்சை சரக விதைப்பரிசோதனை அலுவலர் து.சிவவீர பாண்டியன், நாகப்பட்டினம், விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் அ.அமுதாதேவி மற்றும் வேளாண்மை அலுவலர் செ.பிரசன்னா ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

பருத்தி சாகுபடி மற்றும் பூச்சி மேலாண்மை குறித்து செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



தென்காசி, நவ.12

தென்காசி மாவட்டம், வாசுதேவ நல்லூர் எஸ்.தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள், தங்களது ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லி புத்தூர் வட்டாரம், ராமச்சந்திராபுரத்தில் விவசாயிகளுக்குப் பருத்தி சாகுபடி மற்றும் பூச்சி மேலாண்மை குறித்த நேரடி செயல்விளக்க முகாம் நடத்தினர்.

வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் சார்பில் நடைபெற்ற 'பருத்தி உற்பத்தி இயக்கம்' (Mission for Cotton Productivity) திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் ஒரு பகுதியாக இந்த முகாம் அமைந்தது. ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி விமலா, கலந்து கொண்டு, நிலம் தயாரித்தல், சான்று பெற்ற வீரிய ஒட்டு ரக விதைகள் தேர்வு (டீஎன்ஏயு கோ 17), சரியான இடைவெளி நடுதல் (100X10 / 90X15 செ.மீ), களை மேலாண்மை மற்றும் தரம் பிரித்து அறுவடை செய்தல் குறித்து விரிவாக விளக்கினார். மேலும் பருத்தியில் இலைகள் சிவக்கும் நோயைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 8 கிலோ மெக்னீசியம் மற்றும் 8 கிலோ துத்தநாகம் (Zinc) இட வேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.

இதைத் தொடர்ந்து, வேளாண் கல்லூரி மாணவர்கள் ஆர்.சஞ்சய் குமார் மற்றும் எல்.மாரிச்செல்வம் ஆகியோர் விவசாயிகளுக்குச் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் காய்ப்புழு மேலாண்மை குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

குறைந்த செலவில் ஒட்டும் பொறிகள் : இலைப்பேன், தத்துப்பூச்சி, அசுவினி மற்றும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த, எளிய முறையில் சார்ட் பேப்பர் மற்றும் விளக்கெண்ணெய் பயன்படுத்தி நீல மற்றும் மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளைத் தயாரித்துக் காண்பித்தனர்.

விளக்குப் பொறி மாதிரிகள் : பருத்தியைத் தாக்கும் இளஞ்சிவப்பு காய்ப்புழு மற்றும் காய் துளைப்பான்களைக் கவர, பழைய பிளாஸ்டிக் பாட்டில் மற்றும் மின்விளக்கு மூலம் எளிதில் செய்யக்

கூடிய விளக்குப் பொறியை உருவாக்கி செயல்முறை விளக்கம் தந்தனர்.

மேலும் வேப்ப எண்ணெய், என்.எஸ்.கே.இ (NSKE), இனக் கவர்ச்சிப் பொறி மற்றும் தேவைப்படும் தருணங்களில் பூச்சிக் கொல்லிகளைச் சரியான அளவில் பயன்படுத்துவது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இம்முகாமில் உள்ளூர் விவசாயிகள், வேளாண் துறை அலுவலர்கள் மற்றும் இறுதியாண்டு வேளாண் கல்லூரி மாணவர்கள் பெருமளவில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.



மூடாக்கு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு



திருச்சி, நவ.12

திருச்சி மாவட்டம், மண்ணச்ச நல்லூர் ஒன்றியத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறைஎழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிகழ்வின் கீழ், விவசாயிகளுக்கு வேளாண்மையில் மூடாக்கு (Mulching) முறைகளின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன் பாடுகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. மூடாக்கு என்பது பயிர்களைச் சுற்றியுள்ள மண்ணின் மேற்பரப்பை பல்வேறு பொருட்களைக் கொண்டு மூடும் முறையாகும். இதில் இயற்கை மூடாக்கு முறையில் வைக்கோல், காய்ந்த இலைகள், தென்னை நார் கழிவுகள் மற்றும் கரும்புத் தோகைகள் போன்ற பொருட்களும், செயற்கை மூடாக்கு முறையில் கருப்பு மற்றும் வெள்ளி நிற பாலித்தீன் தாள்களும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், உயிருள்ள தாவரங்களைப் பயன்படுத்தியும் மண்ணை மூடும் உயிரியல் மூடாக்கு முறை பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

இம்முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மண்ணிலிருந்து நீர் ஆவியாவதைக் குறைத்து, மண்ணின் ஈரப்பதத்தைப் பாது காக்கவும், களைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், மண் அரிப்பைத் தடுக்கவும் முடியும். இயற்கை மூடாக்குப் பொருட்கள் மட்குவதன் மூலம் மண்ணின் கரிமச் சத்து மற்றும் வளத்தை அதிகரிக்க உதவுகின்றன. இதனால் பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூலை மேம்படுத்த முடியும் என மாணவிகள் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வின்போது விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று, பல்வேறு மூடாக்கு முறைகள், அவற்றிற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்தும் கேட்டறிந்தனர். மேலும், குறைந்த செலவில் கிடைக்கும் உள்ளூர் பொருட்களைக் கொண்டு மூடாக்கு அமைக்கும் முறைகள் குறித்தும் தெரிந்து கொண்டனர்.

கிராம பங்கேற்பு ஊரக மதிப்பீடு செய்த வேளாண்மைக் கல்லூரி மாணவிகள்

மதுரை, நவ.12

மதுரை வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்தில் அமைந்து உள்ள நீரேத்தான் கிராமத்தில் பங்கேற்பு ஊரக மதிப்பீடு (Participatory Rural Appraisal – PRA) ஆய்வினை மேற்கொண்டனர்.



இவ்வாய்வில் நிவேதா சு, கௌசல்யா ஆ, நிஹிதா மூ, பிரகல்யா செ, பிரனிதா க, பிரியதர்ஷினி க, விதுலா ஸ்ரீ மு, யக் ஷினி த, ஜெசிபர் எம். சேவியர் மற்றும் ரிஃபா நசார் அ, ஆகிய மாணவிகள் பங்கேற்றனர்.

பயன்படுத்தப்பட்ட PRA கருவிகள்

கிராமத்தின் சமூக, பொருளாதார, வேளாண்மை மற்றும் இயற்கை வளங்களைப் புரிந்துகொள்ளப் பல்வேறு PRA கருவிகள் பயன் படுத்தப்பட்டன.

– **காலவரிசை வரைபடம் (Timeline) :** கிராமத்தின் கடந்தகால வளர்ச்சி மற்றும் முக்கிய நிகழ்வுகளை அறிதல்.

– **செல்வநிலை வகைப்படுத்தல் (Wealth Ranking) :** குடும்பங் களின் பொருளாதார நிலையை அறிதல்.

– **பருவகால அட்டவணை (Seasonal Calendar) :** பயிர் சாகுபடி, மழைப்பொழிவு மற்றும் பருவகால வேலைகளைப் புரிந்து கொள்ளுதல்.

– **இடம் பெயர்வு வரைபடம் (Mobility Map) :** கல்வி, மருத்துவம் மற்றும் வேலைவாய்ப்பிற்காக மக்கள் செல்லும் இடங்களை அறிதல்.

– **பிரச்சினை மரம் (Problem Tree) :** கிராம மக்களின் முக்கியப் பிரச்சினைகள், காரணங்கள் மற்றும் விளைவுகளைக் கண்டறிதல்.

– **பாலினப் பகுப்பாய்வு (Gender Analysis) :** ஆண்கள் மற்றும் பெண்களின் பணிப் பங்களிப்பை அறிதல்.

– **குறுக்குவழி நடைப்பயணம் (Transect Walk) :** கிராமத்தின் நிலம், நீர்நிலைகள் மற்றும் அடிப்படை வசதிகளை நேரடியாகப் பார்வை யிடுதல்.

– **வள வரைபடம் (Resource Map) :** கிராமத்தின் இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களை அடையாளம் காணுதல்.

– **சாலை வரைபடம் (Road Map) :** சாலை வசதிகள் மற்றும் போக்குவரத்துத் தொடர்புகளை அறிதல்.

– **வென் வரைபடம் (Venn Diagram) :** கிராமத்தில் செயல்படும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், அவற்றின் பங்கு மற்றும் கிராம மக்களுடனான தொடர்புகளை அறிதல்.

இந்த ஆய்வின் மூலம் கிராம மக்களுடன் நேரடியாகக் கலந்து ரையாடி, அவர்களின் தேவைகள், கருத்துகள், விவசாயப் பிரச் சினைகள் மற்றும் வாழ்வாதார முறைகள் குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேலும், கிராமத்தின் வளங்கள், அடிப்படை வசதிகள் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அடையாளம் காணப்பட்டன.

நீரேத்தான் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட PRA ஆய்வு, கிராமத்தின் உண்மையான நிலையைப் புரிந்துகொள்ளவும், விவசாயிகள் மற்றும் கிராம மக்களின் தேவைகளை அறியவும் உதவியது. இச்செயல்பாடு மாணவிகளுக்கு கிராமப்புற வாழ்க்கை, வேளாண்மை மற்றும் சமூக வளர்ச்சி குறித்த நேரடி கள அனுபவத்தை வழங்கியது.

கிசான் கடன் அட்டைத் திட்டம் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் மாணவர்கள் விழிப்புணர்வு!



சேலம், நவ.12

சேலம் மாவட்டம், கோணமடுவு கிராமத்தில், வாழவச்சனூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கிசான் கடன் அட்டைத் திட்டம் (Kisan Credit Card – KCC) குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

இச்செயல்விளக்கத்தின் போது, கிசான் கடன் அட்டையின் முக்கியத்துவம், அதன் மூலம் விவசாயிகள் பெறக்கூடிய குறுகிய காலக் கடனுதவிகள், பயிர் சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்களை வாங்குவதற்கான நிதி வசதிகள் மற்றும் கடன் பெறுவதற்கான தகுதிகள் குறித்து விளக்கப்பட்டது.

மேலும், கிசான் கடன் அட்டைக்கு விண்ணப்பிக்கும் முறை, தேவையான ஆவணங்கள், வங்கிகள் மூலம் கடன் பெறும் நடைமுறைகள் மற்றும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பயன்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்தச் செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகள் கிசான் கடன் அட்டைத் திட்டத்தின் பயன்கள் மற்றும் வேளாண் பணிகளுக்குத் தேவையான நிதியுதவியைப் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து அறிந்து கொண்டனர்.

வெங்கிபாளையத்தில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்!



சேலம், நவ.12

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், வெங்கிபாளையம் கிராமத்தில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் சிறப்பாக நடைபெற்றது. இதில் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

கால்நடை மருத்துவர்களின் உதவியுடன் நடைபெற்ற இம் முகாமில், கால்நடைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள், தடுப்பூசி செலுத்துதல் மற்றும் தேவையான சிகிச்சைகள் வழங்கப்பட்டன. மேலும், கால்நடைகளின் சுகாதாரத்தைப் பராமரித்தல், நோய் களைத் தடுக்கும் முறைகள், முறையான தீவன மேலாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பில் கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இம்முகாமில் பங்கேற்ற வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் கால்நடை மருத்துவர்களுடன் இணைந்து முகாம் நடவடிக்கை களைக் கற்றறிந்து, கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்து நடைமுறை அனுபவம் பெற்றனர். இம்முகாம் விவசாயிகளுக்கும் கால்நடை வளர்ப்போருக்கும் பயனுள்ளதாக அமைந்தது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P.Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

வாழையில் ஆண் பூ நீக்கம் மற்றும் ஊறுகாய்ப் புல் தயாரிப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



சேலம், நவ.12

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு பயிலும் வேளாண் மாணவிகள், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூரில், தங்கி இருந்து ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE - Rural Agricultural Work Experience) கீழ் சேலம் மாவட்டம், திருமலைகிரி மற்றும் கன்னங்குறிச்சி கிராமங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர்.

திருமலைகிரி கிராமத்தில் வாழையில் ஆண் பூ நீக்கம் (Banana Denavelling) குறித்த செயல்விளக்கம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. வாழைக்குலையில் பெண் பூக்கள் காய்களாக உருவான பிறகு, இறுதியில் உள்ள ஆண் பூவை நீக்கும் முறைகள் பற்றி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து, கன்னங்குறிச்சி கிராமத்தில் கால்நடைகளுக்கான ஊறுகாய்ப் புல் (Silage) தயாரிப்பு குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

பசுந்தீவனத்தைச் சரியான முறையில் நறுக்குதல், காற்றுப் புகாதவாறு சேமித்தல் மற்றும் நொதித்தல் மூலம் நீண்ட காலத்திற்குத் தீவனமாகப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகள் மூலம் வாழை சாகுபடி மேலாண்மை மற்றும் கால்நடைகளுக்கான தீவனப் பாதுகாப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், மாணவர்கள் விவசாயிகளுடன் நேரடியாகப் பழகி நடைமுறை அனுபவத்தைப் பெற்றனர்.

உயிர்ம விவசாயிகள் இலவசமாக உயிர்மச்சான்று பெற உதவி இயக்குனர் அழைப்பு

விழுப்புரம், நவ.12

விழுப்புரம் மாவட்டம் விதை சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றிப்பு உதவி இயக்குனர் தா பாபு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இயற்கை வேளாண்மை செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையிலும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலும் உயிர்மச்சான்று பெறுவதற்கான கட்டணத்தை ரத்து செய்து இலவசமாக உயிர்மச்சான்று பெற்றுக் கொள்ளலாம் என தமிழக அரசு வேளாண் பட்ஜெட்டில் 2006 – 2027அறிவித்துள்ளது.

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தின் (ஹிஜ்ணநுஜ்ண) கீழ் பதிவு செய்து கட்டணமின்றி உயிர்மச்சான்று பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள் களுக்கு விவசாயிகளே மதிப்பு கூட்டி விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்யலாம். மேலும்கூடுதலாக உற்பத்தி செய்யப் படும் பொருள்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிக லாபம் பெறலாம்.

இதற்காக விவசாயிகள் தங்களுடைய போட்டோ, ஆதார், பான்கார்டு, சிட்டா, நில வரைபடம், நீர் மற்றும் மண் மாதிரி ஆய்வு முடிவுகள் கொண்டு விதைசான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றிப்பு உதவி இயக்குனர் விழுப்புரம் அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

விபரங்களுக்கு விழுப்புரம் : 63825 01750 கள்ளக்குறிச்சி : 96261 76928 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்



ஜெயின் நாற்றுகள்

சிறந்த மகசூல் - அதிக லாபம்

Jain Seedlings

PAPAYA

பப்பாளி

Rs. 16/-

ஒரு நாற்றின் விலை

போக்குவரத்து கட்டணம்

கூடுதலாக.(உடுமலையிலிருந்து)



ரெட் லேடி

தைவான் 786

முன்பதிவு செய்வதற்கு

இன்றே அழையுங்கள்:

94425 02396